


**31.08.2024**

தலைப்புச் செய்திகள்

1. வந்தேபாரத் ரயில் திட்டம் நாட்டின் வளர்ச்சி பயணத்திற்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்கு மத்திய அரசு ஆறாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. ஊரக பகுதி மக்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்க கதர் ஆடைகளை அதிக அளவில் பயன்படுத்துமாறு மத்திய சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு.ஜிதின் ராம் வலியுறுத்தியுள்ளார்.

4. ஆசியாவிலேயே முதன்மையான பகுதியாக தமிழகத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் ஆடவர் துப்பாக்கி சுடும் போட்டிகளில் 10 மீட்டர் ஏர் ரை.:.பில் பிரிவில் ஸ்வரூப் மகாவீர் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

*********

பிரதமர் வந்தேபாரத்

வடக்கிலிருந்து தென் மாநிலங்களுக்கான வந்தேபாரத் ரயில் திட்டம் நாட்டின் வளர்ச்சி பாதைக்கான பயணத்திற்கு உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இருந்து காணொலி வாயிலாக மதுரை - பெங்களூரு, சென்னை - நாகர்கோவில், மீரட் - லக்னோ வழிதடங்களில் 3 புதிய வந்தே பாரத் ரயில் சேவைகளை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் வளர்ச்சி அடைந்த பாரத்திற்கான கனவை இந்த ரயில் விரிவாக்க பணிகள் முன்னெடுத்துச்செல்வதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த புதிய வந்தே பாரத் ரயில்கள் நாட்டின் மிக முக்கியமான வரலாற்று சிறப்பு மிக்க நகரங்களை இணைப்பதாக கூறிய அவர் கோவில் நகரமான மதுரை தகவல் தொழில்நுட்ப நகரமான பெங்களூருவுடன் இதன்மூலம் இணைந்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாட்டில் தற்போது வந்தே பாரத் ரயில்களின் எண்ணிக்கை 102ஆக அதிகரித்துள்ளதாக கூறிய பிரதமர் உலக தரத்திலான பாதுகாப்புடன் கூடிய அதி விரைவு ரயில் பயணத்தை வந்தே பாரத் ரயில்கள் உறுதிசெய்வதாக கூறினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை எட்ட தென் மாநிலங்கள் வளர்ச்சி பெற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த அவர் தென்மாநிலங்களில் உள்ள மாபெரும் திறமைகளையும், வள ஆதாரங்களையும் வாய்ப்புகளையும் சுட்டிக்காட்டினார்.

எனவே தமிழ்நாடு கர்நாடகம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள தென் மாநிலங்கள் வளர்ச்சி பெறுவதற்கு அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

இதனை மனதில் கொண்டே தமிழகத்திற்கு இந்தாண்டு ரயில்வே பட்ஜெட்டில் ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும்,

2014ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 7 மடங்கு அதிகம் என்றும் குறிப்பிட்டார்.

சென்னையில் நடைபெற்ற வந்தே பாரத் ரயில் இயக்க நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன், ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் எல்.முருகன் மதுரை பெங்களூரு சென்னை நாகர்கோவில் இடையிலான வந்தே பாரத் ரயில்களின் இயக்கம் மிகப்பெரிய வெற்றியடையும் என்றார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் 78 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்படும் என்று கூறிய அவர் சென்னை எழும்பூர் ரயில் நிலையம் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

வாய்ஸ்

மதுரை ரயில் நிலையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் ரயில்வே இணை அமைச்சர் திரு.சோமன்னா பங்கேற்றார்.

*********

பிரதமர் நீதிமன்றம்

முன்னதாக புதுதில்லியில் தேசிய நீதியியல் 2 நாள் மாநாட்டில் இன்று துவக்க உரையாற்றிய பிரதமர், மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்ய கடுமையான சட்டங்களை தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வன்முறைகளுக்கு எதிரான முடிவுகளை விரைவாக எடுப்பதன் மூலம் மகளிரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று சுட்டிக்காட்டினார்.

ஜனநாயகத்தின் தாயாக திகழும் இந்தியாவின் மாண்பை, உச்சநீதிமன்றத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு, மேலும் வலுப்படுத்தும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையான்மையை உச்சநீதிமன்றம் எப்பொழுதுமே பறைசாற்றி வருவதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

குடிமக்களையும், நீதியையும் மாண்பையும் முன்னிறுத்தும் வகையில் புதிய குற்றவியல் சட்டங்களில் ஒன்றான பாரதிய நியாய சன்ஹிதா திகழ்வதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்றத்தின் 75ஆவது ஆண்டு நினைவு அஞ்சல் தலையையும், நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

*********

ஜிதின் ராம்

நாட்டில் கதர் கிராம கைவினை பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் அவசியத்தை மத்திய சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு.ஜிதின் ராம் வலியுறுத்தியுள்ளார்.

நாடுமுழுவதும் அக்டோபர் 2ஆம் தேதிமுதல் 31ஆம் தேதிவரை காதி திருவிழா நடைபெறுவதை ஒட்டி புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர் ஊரக பகுதி மக்களின் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கதர் ஆடைகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

காதி மேம்பாட்டிற்கான மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து அறியும் வகையில் விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

*********

## UPI

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை 81 லட்சம் கோடி ரூபாய் **UPI** பண பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் 37 சதவிகித வளர்ச்சியுடன் மின்னனு பண பரிவர்த்தனை வளர்ச்சி அடைந்து வருவதாக அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சீன நாட்டின் அலிபே, பேபால் மற்றும் பிரேசிலின் பிக்ஸ் பண பரிமாற்றங்களை பின்தள்ளி ஒவ்வொரு வினாடிக்கும் 2 ஆயிரத்து 348 பண பரிவர்த்தனைகளுடன் 58 சதவிகித வளர்ச்சியுடன் நம் நாட்டின் மின்னனு துறை அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

*********

முதலமைச்சர்

ஆசியாவிலேயே முதன்மையான வளர்ச்சி பெற்ற மாநிலகமாக தமிழகத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள முதலமைச்சர், கலி∴போர்னியா மௌண்டன் வியூவில் கூகுள் நிறுவன உயர் அதிகாரிகளுடன், தொழில் முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டார்.

இதன் ஒருபகுதியாக அமெரிக்காவின் கூகுள் நிறுவனம் தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இதன்மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு திறன் பயிற்சியோடு வேலை வாய்ப்புகளுக்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.

இதேபோல் ஆப்பிள் நிறுவன உயர் அதிகாரிகளை சந்தித்த முதலமைச்சர் நாட்டிலேயே மிகச்சிறந்த தொழில் கட்டமைப்பு கொண்ட தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

*********

அன்பில் மகேஷ்

தமிழகத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக்கொண்டுள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் தரமான கல்வி வழங்கப்பட்டு வரும் நிலையில், பிரதமரின் மாதிரி பள்ளிகள் திட்டம் தொடர்பாக கல்வித்துறை உயர்மட்டக்குழு ஆலோசனைக்குப்பின் முடிவெடுக்கப்படும் என்றார்.

கூடங்குளம், உவரி, கூட்டப்புளி உள்ளிட்ட மாவட்டத்தின் 10க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவு அமைக்க 48அரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

*********

தர மதிப்பீடு

சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் தேசிய தர மதிப்பீடு அங்கீகார குழுவினர் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

உட்கட்டமைப்பு வசதிகள், கல்விதிட்டங்கள், மாணாக்கரின் சாதனைகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகள் உள்ளிட்டவை குறித்து இதில் ஆராயப்பட்டது.

*********

இருவரி

தமிழ்நாட்டில் குடும்ப அட்டை தாரர்கள் ஆகஸ்ட் மாதத்திற்கான துவரம்பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றை அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை பெற்றுக்கொள்ளலாம் என அரசு அறிவித்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் வன பரப்பை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் சவுக்கு, தேக்கு கொய்யா உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகளை மக்கள் இலவசமாக பெற்று பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட வன அலுவலர் குகனேஷ் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சீர் மரபினர் இனத்தை சேர்ந்தவர்கள் மத்திய அரசின் **Seed** பொருளாதார ஆளுமை திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களுக்கான குறைதீர் கூட்டம் வரும் புதன்கிழமை நடைபெறுகிறது.

**fhQ;rpGuk; khtl;lj;jpy; Mjpjpuhtpl> goq;Fbapd eyj;Jiw rhh;gpy; khtl;l mstpyhd tpopg;Gzh;T kw;Wk; fz;fhzpg;G FO mikf;f tpUk;GNthh; tUk; 6 Mk; Njjpf;Fs; tpz;zg;gpf;fyhk; vd khtl;l Ml;rpj;jiyth; jpUkjp.fiyr;nry;tp Nkhfd; njhptpj;Js;shh;.**

சென்னையில் நடைபெற உள்ள நவராத்திரி கொலு விற்பனை கண்காட்சியில் அரங்குகள் அமைக்க விரும்பும் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் வரும் 10ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

*********

**Nfhil tpoh – tha;];**

**jpUtz;zhkiy khtl;lk; [t;thJ kiyapy; eilngw;W tUk; Nfhil tpoh ,d;Wld; epiwtilfpwJ.**

**,JFwpj;J vkJ nra;jpahsh;**

**...... tha;]; ........**

*********

கோவில்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெற்று வரும் ஆவணி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பச்சை சார்த்தி வைபவம் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

*********

பாராலிம்பிக்

பாரீஸில் நடைபெறும் பாராலிம்பிக் போட்டிகளில் ஆடவர் 10 மீட்டர் ஏர் ரை.்.பில் பிரிவில் ஸ்வரூப் மகாவீர் இன்று களமிறங்குகிறார்.

அதேபோல் மகளிர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் ரூபினா ்.பிரான்சிஸ் போட்டியிடுகிறார்.

ஈட்டி எறிதல் பிரிவின் இறுதி ஆட்டத்தில் பிரவீன்குமார் இன்று பங்கேற்கிறார்.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

*********